**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 31/2026**
**Prosecution Witness**:2

| | | | |
|---|---|---|---|
| Name | நல்லசிவம் (PW2 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of July 2026** by S.Ponraj Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition u/s.355 BNSS filed and allowed.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கொடுமுடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.01.2026ம் தேதியன்று நான், தலைமை காவலர் 263 ரத்தினசாமி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.அப்பாதுரை ஆகியோர்கள் பகல் ரோந்து அலுவலாக மதியம் 01.00 மணியளவில் காவல்நிலையத்தில் இருந்து புறப்பட்டு கொடுமுடி காவல்நிலைய சரக பகுதிகளில் ரோந்து சென்று பின்பு மதியம் 01.30 மணி சுமாருக்கு கொடுமுடி இரயில்வே கேட் அருகில் கண்காணித்து வரும்போது ஒரு நபர் சீல் உடைக்காத நிலையில் 180 ML அளவுள்ள Old Secret XXX Rum பாட்டில்கள்- 30ஐ விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார். நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து அவரை பிடித்து விசாரித்ததில் அவர் தனது பெயர் கனகராஜ் என்றும், அதிக விலைக்கு விற்பனை செய்யும் பொருட்டு மதுபான பாட்டில்களை வைத்திருப்பதாக சிறப்பு சார்பு ஆய்வாளர் அப்பாதுரை அவர்களிடம் கூறினார். பின்னிட்டு 02.00 மணி சுமாருக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் அப்பாதுரை அவரிடம் இருந்த 180 ML அளவுள்ள Old Secret XXX Rum பாட்டில்கள்- 30ஐ தலைமை காவலர் ரத்தினசாமி மற்றும் எனது முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி, வழக்கு சொத்துக்களுடன் மதியம் 02.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:20:32 +0530

செய்வதற்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் அப்பாதுரை அவர்களுக்கு உதவியாக இருந்தேன். சிறப்பு சார்பு ஆய்வாளர் அப்பாதுரை அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் ரோந்துக்கு செல்லும் போது நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஒரு வண்டியிலும், ரத்தினசாமி என்பவர் ஒரு வண்டியிலும் சென்றோம் என்றால் சரியல்ல நானும் ரத்தினசாமியும் ஒரு வண்டியிலும், சிறப்பு உதவி ஆய்வாளர் தனியாக அவரது வண்டியிலும் சென்றோம். காவல் நிலைய சரகத்திற்குள் மொத்தம் எத்தனை மதுபான கடைகள் சம்பவ தேதியன்று இருந்தது என்றால் 4 கடைகள் இருந்தது. மேற்படி கடைகள் எங்கு உள்ள என்றால் சாலைபுதூர், கொடுமுடி, வடக்குபுதுப்பாளையம், ஒத்தக்கடை ஆகிய இடங்களில் மதுபான கடைகள் உள்ளது. நான் காவல்நிலையத்தில் இருந்து 01.00 மணிக்கு கிளம்பி முதலில் எங்கு சென்றோம் என்றால் மகுடேஷ்வரர்கோவில் வழியாக கொடுமுடி இரயில்வே கேட் அருகே வந்தபோது எதிரி அருகில் உள்ள முட்புதருக்கு அருகில் நின்று கொண்டிருந்தார்.

2. சிறப்பு உதவி ஆய்வாளருக்கு எப்போது இரகசிய தகவல் கிடைத்தது என்றால் 01.30 மணி இருக்கும். முதலில் கொடுமுடி மகுடேஷ்வரர் கோவில் ஆற்றங்கரை ஓரமாகவும், தண்டாபானி மளிகை கடை அருகே உள்ளசந்து ஆகியவற்றை கண்காணித்து கொண்டு சம்பவ இடம் வந்தோம். சம்பவ இடம் கொடுமுடி இரயில்வே கேட்டிற்கு எந்த திசையில்உள்ளது என்றால் மேற்கு திசையில் உள்ளது. எதிரி மதுகடை மூடியுள்ள போது மதுபாட்டில்கள் கேட்போருக்கு அவர்கள் இருக்கும் இடத்திலேயே சென்று விற்பார் என சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கும்போது கூறினேனா என்றால் இல்லை.

3. எதிரி மதுபாட்டில்களை அதிக விலைக்கு விற்பதாக வைத்துள்ளார் என்று குற்றத்தை ஒப்புக்கொண்டதை வாக்குமூலமாக சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்துகொண்டார் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் சாட்சியாக வராததால் எங்களிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள் என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:21:39 +0530

சரியல்ல. நான் காவல் நிலையத்தில் இருந்து ரோந்து பணியாக முதலில் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்று சொன்னால் தவறு என்றால் சரிதான். எதிரியிடம் கைப்பற்றிய மதுபாட்டில்களில் வரிசை எண், தயாரிப்பு தேதி குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை. என் முன்னிலையில் எந்த மதுபாட்டில்களையும் கைப்பற்றாததால் தான் என்னால் வரிசை எண், மற்றும் தயாரிப்பு தேதி குறிப்பிடப்பட்டிருந்ததா என்று கூறமுடியவில்லை என்றால் சரியல்ல.

4. கைப்பற்றுதல் மகஜரில் மேலே உள்ள தேதிக்கும் சிறப்பு உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்த தேதிக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் VM என இரண்டு இடங்களில் வேறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் நான் சொன்ன விதத்தில் தயாரிக்கப்படவில்லை என்பதால் தான் மேற்படி முரண்பாடுகள் கைப்பற்றுதல் மகஜரில் உள்ளது என்றால் சரியல்ல. சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரி தற்போது எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்று தெரிந்துகொண்டாரா என்றால் தெரிந்துகொண்டார். எனக்கு எதிரி கூறியது தெரியுமா என்றால் தெரியாது, நான் வழக்கு சொத்துக்களுடன் நின்று கொண்டிருந்தேன். நான் சம்பவ இடத்தில் இல்லாததால் தான் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரியை எவ்வளவு நேரம் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்திருப்போம் என்றால் சுமார் அரைமணிநேரம் விசாரித்து கைப்பற்தல் மகஜர் தயார் செய்தோம். எதிரியை நாங்கள் இரயில்வே கேட் அருகே வைத்து விசாரித்ததால் கூட்டம் கூடியது என்றால் சரியல்ல, எதிரி இரயில்வே கேட்டில் இருந்து சுமார் 20,30 அடி தள்ளி இருந்தார், அதனால் கூட்டம் கூடவில்லை.

5. எதிரி அதிகவிலைக்கு மதுபானங்களை விற்பனை செய்கிறார் என்று பொதுமக்கள் யாரும் புகாரோ, வாக்குமூலமோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:21:44 +0530

சிறப்பு உதவி ஆய்வாளர் புள்ளிவிவர கணக்கிற்கு போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலையம் செல்வதற்கு 2 நிமிடங்கள் தான் ஆகும் என்றால் சரிதான், ஆனால் சம்பவம் நடந்த அன்று ரோந்து பணி மேற்கொண்டதால் சற்று தாமதம் ஆனது.

**மறு விசாரணை**: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:21:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 31/2026**
**Prosecution Witness**:3

| | | | |
|---|---|---|---|
| Name | அப்பாதுரை (PW3 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of July 2026** by S.Ponraj Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition u/s.355 BNSS filed and allowed.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது மலையம்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.01.2026ம் தேதியன்று கொடுமுடி காவல்நிலையத்தில் நான் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது நான், சிறப்பு உதவி ஆய்வாளர் நல்லசிவம் மற்றும் தலைமை காவலர் 263 ரத்தினசாமி, ஆகியோர்களுடன் மதுவிலக்கு குற்றத்தடுப்பு சம்பந்தமாக மதியம் 01.00 மணிக்கு கொடுமுடி காவல்நிலையத்தில் இருந்து புறப்பட்டு, கொடுமுடி காவல்நிலைய சரக பகுதிகளில் கண்காணித்து கொண்டு மதியம் 01.30 மணி சுமாருக்கு கொடுமுடி இரயில்வே கேட் அருகே சென்று கண்காணித்து கொண்டிருந்தபோது ஒரு நபர் கையில் வெள்ளை சாக்குடன் சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்தார். அவரை போலீஸ் பார்டிசகிதம் பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் பொன்சங்கர் என்கிற கனகராஜ், வயது 49, த/பெ.மகாலிங்கம் அச்சன்குடி, கடம்பகுடி, ராமநாதபுரம் மாவட்டம் என்றும் கூறினார். அதிக விலைக்கு விற்பனை செய்யும் பொருட்டு 180 ML அளவுள்ள Old Secret XXX Rum பாட்டில்கள்- 30 எண்ணிக்கை வைத்திருப்பதாக குற்றத்தை ஒப்புக்கொண்டவரை 13.30 மணிக்கு கைது செய்து, 14.00 மணிக்கு உடன் வந்த போலீஸ் சாட்சிகள் சிறப்பு சார்பு ஆய்வாளர் நல்லசிவம், மற்றும் தலைமை காவலர் 263 ரத்தினசாமி ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, எதிரி கனகராஜிடம் இருந்த 180 ML அளவுள்ள Old Secret XXX Rum பாட்டில்கள்- 30ஐ கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி சாட்சிகளிடம்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:21:54 +0530

கையொப்பம் பெற்றேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 14.30 மணிக்கு காவல்நிலையம் வந்து எதிரி கனகராஜ் மீது கொடுமுடி காவல் நிலைய குற்ற எண்.10/2026 ச/பி.4(1)(C) TNP Actபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கையை சமூகம் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். இவ்வழக்கின் எதிரி கனகராஜை திரேக பரிசோதனை செய்து உரிய பிணையில் விடுவித்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களான 180 ML அளவுள்ள Old Secret XXX Rum பாட்டில்கள்– 30ஐ படிவம் 91 மூலம் சமூகம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 180 ML அளவுள்ள Old Secret XXX Rum பாட்டில்கள்– 30 சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.** சிறப்பு சார்பு ஆய்வாளர் நல்லசிவம், தலைமை காவலர் ரத்தினசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. 16.01.2026ம் தேதி வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி கனகராஜ் மீது ச/பி.4(1)(C) TNP Act படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் காவல்நிலையத்தில் இருந்து முதலில்எங்கு ரோந்துக்கு சென்றோம் என்றால், இரயில்வே கேட்டிற்கு முதலில் ரோந்துக்கு சென்றோம். அங்கு எதிரி நான் சொல்வது போல் சாக்கு பையுடன் நின்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். நான் சொல்லும் சம்பவ இடமான முட்புதர் இரயில்வே கேட்டிற்கு கிழபுறமாக உள்ளது. மேற்படி இடத்தை சுற்றி பொதுமக்கள் இருந்தார்கள் என்றால் 4, 5 பேர் இருந்தார்கள். நான் எதிரியை விசாரித்து, கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டேன் என்றால்சுமார் அரைமணிநேரம் எடுத்துக்கொண்டேன். சம்பவ இடமானது கொடுமுடி காவல்நிலையத்தில் இருந்து சுமார் 500 மீட்டர்தொலைவில் உள்ளது என்றால் சரிதான். நான் எதிரியை விசாரிக்கும்போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக சொல்வதை வாக்குமூலமாக பதிவு செய்தேனா என்றால் இல்லை.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:21:59 +0530

மேற்படி வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன் என்று சொன்னால் அது தவறு. எதிரியை நான் விசாரணை செய்தபோதே அவரது பெயர் பொன்சங்கர் என்கிற கனகராஜ் என்று கூறினார் என்றால்சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கையில் நான் ஏன் கனகராஜ் என மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தட்டச்சு பிழை காரணமாக கனகராஜ் என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் எதிரி மதுகடை மூடியுள்ள நேரத்தில் கேட்பவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடத்திற்கு கொண்டு போய் அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்தார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கதியை நான் விசாரணை செய்த சாட்சிகளான தலைமை காவலர் ரத்தினசாமி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் நல்லசிவம் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். நான் சொல்வது போல் சாட்சிகள் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் மேலே உள்ள தேதிக்கும், நான் கையொப்பம் செய்த தேதிக்கும் வேறுபாடு உள்ளது என்றாலும், யாரால் கைப்பற்றப்பட்டது என்ற இடத்தில் VM என்று குறிப்பிட்டுள்ள எழுத்தும் நான் கையொப்பம் செய்த இடத்தில் உள்ள VM என்ற எழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றாலும் சரியல்ல. இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது என்றும் ,நான் தயார் செய்யாததால் தான் அதை பற்றி கூறமுடியவில்லை என்றாலும் சரியல்ல, அது நான் தயார் செய்தது தான்.

3. நான் தயார் செய்த முதல் தகவல் அறிக்கை, கைப்பற்றுதல் மகஜர், படிவம் 91, இறுதி அறிக்கை ஆகியவை அனைத்தும் 16.01.2026ம் தேதியே தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படிஅனைத்து ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஆவணங்கள் தயார் செய்யாமல், பின்னிட்டு தயார் செய்ததால் தான் என்னால் உடனடியாக நீதிமன்றத்திற்கு ஆவணங்களை அனுப்பிவைக்க இயலவில்லை என்றால் சரியல்ல. உயர்அதிகாரிகள் புள்ளிவிவர கணக்கு அடிக்கடி கேட்பார்கள் என்றால் சரியல்ல, ரோந்து சென்றதை மட்டும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:23:28 +0530

கேட்பார்கள். நான் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னநேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:23:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.